## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.79/2020

2024 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19 - ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 19.08.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ரமேஷ் | ஜாதி : | |
| த /பெயர் : | வடிவேல் | மதம் : | |
| கிராமம் : | | தொழில் : | |
| வட்டம் : | | வயது : | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இறந்த சீதாராமன் அய்யரிடம் எனது அப்பா தலையாரியாக பணி செய்து வந்தார். சீதா ராமன் அய்யரின் சொந்த ஊர் எனக்கு தெரியாது. எனது அப்பா தலையாரியாக பணிபுரிந்து வந்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சீதா ராமன் அய்யர் எனது அப்பாவிற்கு ஏற்படுத்தி கொடுத்ததாக சொல்லப்படும் 1992 ல் ஏற்பட்ட ஒப்படைவு ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். எனது வழக்குரையிலும் நிரூபணவாக்குமூலத்திலும் ஒப்படைவு ஆவணம் 1992 ல் ஏற்படுத்தியது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எனத அப்பாவிற்கு வேறு சொத்துக்கள் ஆலத்துாரில் உள்ளது என்றால் சரிதான். அதற்குண்டான கிரய ஆவணங்களும் எனது அப்பா பெயிரல் உள்ளது. எனது அப்பா பெயரில் இரண்டரை மா நிலத்திற்கு கிரைய ஆவணம் உள்ளது. அதற்குண்டான மூல ஆவணம் என்னிடம் இல்லை. புயல் காலத்தில் அந்த ஆவணம் காணாமல் போய்விட்டது.

2. சார்பதிவாளர் அலுவலகத்தில் அந்த ஆவணங்கள் காணாமல் போய்விட்டது என்று சொல்லி சான்று எதுவும் என்னால் பெறப்பட்டுள்ளதா என்றால் எனது அம்மா வாங்கியுள்ளார். எனது அம்மா தற்போது உயிருடன் உள்ளார். எனது அம்மாவிடம் கேட்டால் அந்த சான்றை என்னிடம் கொடுப்பார் என்றால் சரிதான். எனது ஊரில் தெற்கு தெரு, தோப்பு தெரு, படுகை தெரு என்ற மூன்று தெருக்கள் உள்ளது. பிரதிவாதியின் பண்ணையில் நிறைய பேர் வேலை பார்த்தார்கள் என்றால் சரிதான். அதில் எனது அப்பாவும் வேலை பார்த்தார்கள் என்றால் சரிதான். பிரதிவாதியின் சகோதரர் சிவசுப்பிரமணியன் அய்யரை எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

3. அவர் என்மீது தாவா சொத்து தொடர்பாக காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமான் என்றால் தெரியாது. நான்தான் அவர்மீது புகார் கொடுத்துள்ளேன். சிவசுப்பிரமணியன் அய்யர் மீது நான் கொடுத்த புகார் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் துரைசாமி மீதுதான் புகார் செய்துள்ளேன். அந்த புகார் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. இந்த தாவா சொத்தை அளவீடு செய்வதற்காக சிவசுப்பிரமணயின் அளவீடு செய்தார்கள் என்றால் சரிதான். அந்த அளவீட்டில் நீங்க பிரச்சனை செய்ததாக கூறி மனு கொடுத்து காவல் துறை உதவியுடன் அளவீடு செய்தார்களா என்றால் தாவா சொத்திற்கு பக்கத்தில் உள்ள நிலத்தை தான் அளவீடு செய்யப்பட்டது. தாவா சொத்தில் அளவீடு செய்து வேலி போடப்பட்டதற்கு பின்னிட்டு நான் வேலியை நீக்கியதாக கூறி நான் விக்கிரவாண்டியம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதான என்றால் இல்லை. நான்தான் புகார் கொடுத்தேன்.

4. புகார் நகல் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சிவசுப்பிரமணியன் கொடுத்த புகாரில் சீதாராமர் அய்யரின் வாரிசுகளின் பொது அதிகார முகவர் என்ற அடிப்படையில் புகார் கொடுத்து தாவா சொத்து அளவீடு செய்யப்பட்டு ள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சீதா ராமர் அய்யரின் வாரிசுகளிடமிருந்து நாளது தேதிவரை இருந்து வருகிறது என்றாலும் அந்த தாவா சொத்து சீதா ராமர் அய்யரின் வாரிசுகளின் பொது அதிகார முகவர் என்ற அடிப்படையில் சிவசுப்பிரமணிய அய்யரின் மேற்பார்வையில் பராமரித்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில்தான் உள்ளது. தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதற்கு உண்டான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வீட்டுவரி ரசீது தாக்கல் செய்துள்ளேன் அதில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்தில் மனுதாரர் ரேஷன் கடையில் பொருள்கள் வாங்க சென்றபோது ரேஷன் கார்டு காணாமல் போய்விட்டது என்று புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 25 வருடங்களாக தாவா சொத்தை அனுபவித்து வருகிறேன் என்பதற்கு உண்டான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சீதா ராமர அய்யரின் வாரிசுகளளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் பிரச்சனை எதுவும் செய்யாததால் அவர்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை. பிரதிவாதி கடந்த 20.08.2020 தேதியில் பிரச்சனை செய்தது தொடர்பாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் கொடுத்துள்ளேன். அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் நடைபெறாத சம்பவம் நடைப்பெற்றதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. என்னால் எதிர்நிலை தாக்கல் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் சீதாராமர் அய்யரின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்காததால இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

5. சீதாராமர் அய்யரால் எனது அப்பாவிற்கு எவ்வித ஆவணமும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவின் பெயரில் உள்ளவேறு ஆவணம் எறிந்துவிட்ட நிலையில் சீதாராமர் அய்யர் ஒரு ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்ததாகவும் அந்த ஆவணம் எறிந்து விட்டதாக கூறி பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. தாவா சொத்து எந்த காலத்திலும் என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றாலும், சிவசுப்பிரமணிய அய்யரின் மேற்பார்வையின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றாலும் என்னால் கோரப்பட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. என்னால் செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d.A.Seethalakshmi,
District Munsif
Mannargudi.